TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097158

1. District : நாகப்பட்டினம் மாவட்டம் PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். காவல்நிலையம் Year: 2020 ஆண்டு FIR No.: 01/2020 மு.த.அ. எண் Date: 08.09.2020 நாள்

2. (i) Act சட்டம்: குற்ற விசாரணை Sections பிரிவுகள்: 102 Cr PC and
(ii) Act சட்டம்: முறைச் சட்டம் & Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as
(iii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம். Sections பிரிவுகள்: amended as 7 of PC
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : (amendment) Act 2018, and 7-A of PC (amendment) Act 2018.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 08.09.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30 Hrs Time to : நேரம் வரை 17.20 Hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.09.2020 Time : நேரம் 22.30 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written (typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 60 km வடக்கு. மீன்துறை உதவி
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் (வடக்கு) சீர்காழி.
(c) In case outside limit of this Police Station, then the Name of P S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. கஜேந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2020 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. M. சங்கர், மீன்துறை சார்-ஆய்வாளர், திருமுல்லைவாசல், உதவி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் (வடக்கு) சீர்காழி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

இல்லை

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது

இன்று 08.09.2020-ம் தேதி 22.30 மணிக்கு, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன், அவர்கள் அளித்த அறிக்கை மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 08.09.2020- ம் தேதி மாலை 15.30 மணி முதல் 17.30 மணி வரை மீன்துறை உதவி இயக்குநர், நாகப்பட்டினம் (வடக்கு), சீர்காழி, அலுவலத்தில் திடீர் சோதனை மேற்கொண்டோம். மேற்படி திடீர் சோதனையின் போது மீன்துறை சார் ஆய்வாளர் திரு.M.சங்கர், பிரதமந்திரி கிசான் திட்டத்தின் கீழ் கடன்பெற விரும்பும் மீனவர்களிடமிருந்து விண்ணப்பம் கொடுக்க வந்தவர்களிடம் குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ.16,950/-- மற்றும் (2) மீன்துறை உதவி இயக்குநர் அலுவலக நிர்வாக பிரிவு உதவியாளர் பயன்படுத்தும் இரும்பு பீரோவில் சரியாக கணக்கு காட்டப்படாத பணம் ரூ1,130/-ம் ஆகக் கூடுதல் ரூ.18,080/- யையும் மேற்படி மீன்துறை சார் ஆய்வாளர் திரு.M.சங்கர் குற்றமுறு நடவடிக்கையின்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
08/09/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

09/09/2020.

Name: பெயர் ........................
Rank: நிலை ........................ No. எண் ..........

GCP-240-34(Type-2) 90.000 Cps -21 3 16(HCL-12)p 2

மூலம் கடன்பெற விரும்பும் மீனவர்களிடமிருந்து விண்ணப்பம் கொடுக்க வந்தவர்களிடம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும், பீரோவில் இருந்த உரிமைகோராத பணம் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பெற்ற கையூட்டு தொகை என்ற சந்தேகத்தின் பேரிலும் நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இத்திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் ரூ.18,080/-, பிரதமந்திரி கிசான் திட்டத்தின் கீழ் கடன்பெற விரும்பும் மீனவர்களிடமிருந்து பெறப்பட்ட 162 விண்ணப்பங்கள், தயார் செய்யப்பட்ட நடவடிக்கை/மகஜர் மற்றும் திரு.M.சங்கர் தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே எதிரி (1) திரு.M.சங்கர், மீன்துறை சார் ஆய்வாளர், திருமுல்லைவாசல் உதவி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் (வடக்கு) சீர்காழி என்பவர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். S/d K. கஜேந்திரன் 08.09.2020, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள். இன்று 08.09.2020 ஆம் தேதி மாலை சுமார் 15.30 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா தென்பாதி, பெஸ்ட் மெட்டிரிக்குலேசன் பள்ளிக்கு எதிரே உள்ள பெஸ்ட் கல்வி நிறுவனக் கட்டிடத்திற்கு அருகில் உள்ள தெற்குபார்த்த கிரில் வாசல் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் நாகப்பட்டினம் வடக்கு அலுவலகத்தை திரு.K.கஜேந்திரன், த/பெ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.M.அருள்பிரியா மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, தென்பாதி, பெஸ்ட் மெட்டிரிக்குலேசன் பள்ளிக்கு எதிரே உள்ள பெஸ்ட் கல்வி நிறுவனக் கட்டிடத்திற்கு அருகில் உள்ள நாகப்பட்டினம் வடக்கு மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் மாண்புமிகு பிரதம மந்திரி – கிசான் கடன் அட்டை திட்டத்தின்கீழ் கடன்பெற விரும்பும் மீனவ மக்களுக்கு வங்கிகள்மூலம் கடன்பெற வாங்கும் விண்ணப்பத்தினை பெற்று பரிந்துரை செய்ய திருமுல்லைவாசல் மீன்துறை சார்-ஆய்வாளர் திரு.M.சங்கர் என்பவர் அவரது எல்லைக்குட்பட்ட கிராம விண்ணப்பதாரர்களிடம் தலா ரூபாய் 100 வீதம் கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், மீனவர்கள் வேறுவழியில்லாமல் மேற்படி பொதுபணியாளருக்கு கையூட்டு கொடுப்பதாகவும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 08.09.2020 மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்களுக்கு தகவல் தெரிவித்தும், நாகப்பட்டினம் லஞ்சஒழிப்புபிரிவு அலுவலகத்திலிருந்து 08.09.2020 ஆம் தேதி 12.00 மணிக்கு புறப்பட்டு சீர்காழி, நாகப்பட்டினம் வடக்கு மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு 15.30 மணிக்கு வந்து, மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் நாகப்பட்டினம் வடக்கு சீர்காழி மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு.மேற்படி நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி, நாகப்பட்டினம் வடக்கு மீன்துறை

உதவி இயக்குநர் அலுவலகமானது சீர்காழி தாலுக்கா, தென்பாதி, பெஸ்ட் மெட்ரிக்குலேசன் பள்ளிக்கு எதிரே உள்ள பெஸ்ட் கல்வி நிறுவனக் கட்டிடத்திற்கு அருகில் மாடி கட்டிடத்தின் தரைதளத்தில் தெற்குபார்த்த நுழைவாயிலுடன் அமைந்துள்ளது. நுழைவாயிலுக்கு அருகில் மேற்கு பக்கம் இ-சேவை மைய கண்ணாடி அறையும் அதனை அடுத்தார்போல் அலுவலக மெயின்டோரும் அதற்கு மேற்கு பக்கம் மீன்துறை சார்-ஆய்வாளர் திரு.M.சங்கர் அமர்ந்து விண்ணப்பங்கள் பெற்று அவரது பணிகளை கவனிக்கும் இடமானது இரண்டு இரும்பு பீரோவால் தடுப்புடன் கூடியதும், அதற்கு அடுத்ததாக கணினியுடன் கூடிய டேபிளும், அதற்கு கிழக்கு பக்கம் திருமதி.P.லெட்சுமி, இளநிலை உதவியாளர், உள்நாட்டு மீன்வளம் என்பவரது இருக்கையும், அதற்கு அடுத்தார்போல் திருமதி.க.பாரதி, தட்டச்சர் அவர்களின் இருக்கையும், அதற்கு அடுத்தார்போல் திரு.R.மோகன், இளநிலை உதவியாளர், பல்வகை பொருள் பிரிவு அலுவலரின் இருக்கையும், அவருக்கு எதிர்புறம் திருமதி.ஹேமபிரியா, உதவியாளர், நிர்வாக பிரிவு அலுவலரின் இருக்கையும், அதற்கு அடுத்ததாக தெற்கு பார்த்து மையத்தில் திரு.S.அந்தோனி ஜான்சன், கண்காணிப்பாளர் அவர்களின் இருக்கையும் உள்ளது. அதற்கு வடக்கு பக்கம் மீன்துறை ஆய்வாளர்கள் அறையும், அதற்கு வடக்கே பதிவேடுகள் வைப்பறையும், ஆய்வாளர் அறைக்கு கிழக்கே மீன்துறை உதவி இயக்குநர் திரு.T.நடராஜன் அவர்களின் அறையுமாக மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது மீன்துறை உதவி இயக்குநர் திரு.T.நடராஜன், மீன்துறை ஆய்வாளர்கள் மற்றும் உதவியாளர் திருமதி.ஹேமபிரியா ஆகியோரை தவிர மற்றவர்கள் அலுவலகத்தில் இருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்து கொண்டனர். பின்னர் மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர் அவர்கள் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தபோது, திரு.S.அந்தோனி ஜான்சன், கண்காணிப்பாளர் அவரிடம் ரூபாய் 250/- இருப்பதாக கூறி ஆஜர் செய்து, அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அந்தப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திரு.M.சங்கர், மீன்துறை சார்-ஆய்வாளர், திருமுல்லைவாசல் அவர்களை சோதனை செய்ததில் அவர் அவரது பேண்டின் வலதுபக்க பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய் 16,950/-ம், அவருடைய பர்ஸில் ரூபாய் 175/-ம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க ரூபாய் 175/- அவரது சொந்தப்பணம் என்றும், ரூபாய்.16.950/- இன்றைய தினம் பெறப்பட்ட மாண்புமிகு பிரதம மந்திரி – கிசான் கடன் அட்டை திட்டத்தின்கீழ் கடன்பெற விரும்பும் கீழமூவர்கரை கிராம மீனவ மக்களுக்கு வங்கிகள்மூலம் கடன்பெறுவதற்குண்டான 162 விண்ணப்பத்தினை பெறுவதற்கும், அலுவலக செலவுகளுக்கும், ஜெராக்ஸ் எடுப்பதற்கு பெறப்பட்ட பணம் என்றதாலும் மேற்படி மனுக்களை சிபாரிசு செய்து வங்கிக்கு அனுப்புவதற்கு கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூபாய் 16.950/- மகஜரில் கைப்பற்றப்பட்டது, அந்த பணத்தை எண்ணிப்பார்க்க 500 ரூபாய் நோட்டுகள் 32(500x32=16,000), 200 ரூபாய் நோட்டு

ஒன்று(1x200=200), 100 ரூபாய் நோட்டுகள் ஆறு(6x100=600), 50 ரூபாய் நோட்டுகள் மூன்று(3x50=150) மொத்தம் ரூபாய் 16,950/- இருந்தது. மேற்படி ரூபாய் 175/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. திரு.R.மோகன், இளநிலை உதவியாளர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடம் பணம் ஏதுமில்லை. திரு.P.லெட்சுமி, இளநிலை உதவியாளர் அவர்களிடம் ரூபாய் 170/- இருந்தது, அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அந்தப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திருமதி.K.பாரதி, தட்டச்சர் அவர்களிடம் ரூபாய் 220/- இருந்தது, அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அந்தப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திருமதி.G.லெட்சுமி காந்தன், மேற்பார்வையாளர் அவர்களை சோதனை செய்ததில் அவர் ரூபாய் 380/- எடுத்து ஆஜர் செய்து, அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அந்தப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தை சோதனை செய்ததில் அலுவலக நிர்வாகப்பிரிவு உதவியாளர் அவர்கள் உபயோகப்படுத்தும் கிழக்கு பார்த்து இருந்த இரும்பு பீரோவில் இருந்து அலுவலர்களால் கணக்கு கூறஇயலாத பணம் ரூபாய் 1,130/- கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது மாலை சுமார் 17.00 மணிக்கு அலுவலகத்திற்கு வந்த மீன்துறை உதவி இயக்குநர் திரு.T.நடராஜன் அவர்களிடம் திடீர் ஆய்வு குறித்து விபரம் தெரிவித்தும், உடன் இருக்கும்படி தெரிவித்து, அவரை சோதனை செய்ததில் அவர் தன்னிடம் ரூபாய் 180/- இருப்பதாக கூறி எடுத்து ஆஜர் செய்து, அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அந்தப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திரு.M.சங்கர், மீன்துறை சார்-ஆய்வாளர், திருமுல்லைவாசல் அவர்களை இன்றைய தினம் பெறப்பட்ட மாண்புமிகு பிரதம மந்திரி – கிசான் கடன் அட்டை திட்டத்தின்கீழ் கடன்பெற விரும்பும் கீழமூவர்கரை கிராம மீனவ மக்களுக்கு வங்கிகள்மூலம் கடன்பெறுவதற்குண்டான விண்ணப்பங்களை கேட்க அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகில் உள்ள மரப்பெட்டியிலிருந்து கீழமூவர்கரை கிராம மீனவர்களின் Common Application form for Fisheries Credit Card விண்ணப்பங்கள் மொத்தம் 162-யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி கீழமூவர்கரை கிராமத்தின் 162 விண்ணப்பங்களும் தக்க மேல்நடவடிக்கைகாக கைப்பற்றப்பட்டது. மேற்படி விண்ணப்பங்கள் பயனாளிகளிடம் பெறுவது மற்றும் வங்கிக்கு பரிந்துரை செய்து அனுப்புவது, மேல்நடவடிக்கை எடுப்பது தொடர்பான பதிவேடுகள் எதுவும் பராமரிக்க படவில்லை என்று மீன்துறை உதவி இயக்குநர் தெரிவித்தார். மேற்படி திடீர் சோதனையின்போது குற்றமுறு எண்ணத்துடன் கடன் விண்ணப்பங்களை பரிந்துரை செய்ய மீன்துறை சார் ஆய்வாளர் திரு.M.சங்கர் கையூட்டாக பெற்ற தொகை என்ற அடிப்படையிலும் சரியான விளக்கம் தராமல் இரும்பு பீரோவில் வைக்கப்பட்டிருந்த மொத்தப்பணம் ரூபாய் **18,080/-** மற்றும் **162** விண்ணப்பங்கள் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் திரு.M.சங்கர், மீன்துறை சார்-ஆய்வாளர் அவர்களை விசாரணை செய்து தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 08.09.2020 ஆம் தேதி மாலை 17.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இன்று **08.09.2020** ந்தேதி **22.30** மணிக்கு மேற்படி புகாரைப் பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2020,

U/s102 Cr.P.C. and section 7 of Prevention of Corruption Act, 1988 as amended as 7 of PC(Amendment) Act, 2018 and 7-A of PC (Amendment) Act, 2018 -ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. S/d M.Arulriya, 8.92020 (M.அருள்பிரியா) காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம்.

முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் மகஜர், எதிரி திரு.M.சங்கர், மீன்துறை சார் ஆய்வாளர், திருமுல்லைவாசல், உதவி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் (வடக்கு), சீர்காழி என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பித்தும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(M.ARULPRIYA) 8/9/2020

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு

நாகப்பட்டினம்.